பக்கங்கள் 12+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை 03.11.2024 | அதிர்வு 94

## நல்லூர் பிரதேச சபை ஊழியர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் நல்லூர் பிரதேச சபை ஊழியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நல்லூர் பிரதேச சபையில் மேற்பார்வை யாளராகக் கடமையாற்றும் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழ்த் தேசியம் பற்றி அரசியல்வாதிகளிடம் சரியான புரிதல் இல்லை



### துரோகிப் பட்டங்களுக்குப் பயப்படாதீர்கள் என்று தமிழரசின் வேட்பாளர் கிருஷ்ணவேணி செவ்வி

“தமிழ்த் தேசியம் தொடர்பில் அரசியல்வாதிகளிடம் சரியான புரிதல் இல்லை. தமிழ்த் தேசியம் என்பது தனியே அரசியல் சார்ந்தது மாத்திரமல்ல. அது மக்கள் வாழ்க்கை சார்ந்தது. அரசியல், பொருளாதாரம், பண்பாடு, கலாசாரம், கல்வி அனைத்திலும் நாங்கள் செழித்து வாழ்கின்ற வாழ்க்கைதான் தமிழ்த் தேசியத்தை உறுதிப்படுத்துகின்ற விடயம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் திருமதி கிருஷ்ணவேணி சிறீதரன் தெரிவித்தார்.

கனடா தமிழ் வண் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“மக்கள் தங்களது அன்றாட தேவைகளை, போதைப்பொருள் பாவனை தொடர்பான பிரச்சினைகளை, கல்வியில் ஏற்பட்டுள்ள பின்னடைவு போன்ற விடயங்களைக் கதைப்பது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான விடயமல்ல. இதற்கான புரிதல் மக்களிடமும் எமது அரசியல் தலைமைகளிடமும் வர வேண்டும்.

மக்களைப் பட்டினி போட்டுவிட்டு தொடர்ந்து உரிமைக்காக மட்டும் குரல் கொடுக்கும்படி நாம் எதிர்பார்க்க முடியாது. 02




# தீர்வுக்கான தீர்க்கமான பொறிமுறை அவசியம்



### அதற்காக அனைவரையும் ஒன்றிணைப்போம் என்கிறது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி

“நிரந்தர அரசியல் தீர்வுக்கான தீர்க்கமான பொறிமுறை அவசியம். அதற்காக அனைவரையும் ஒன்றிணைப்போம்.” – என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“ஏற்கனவே எமது கட்சியால் நிரந்தர தீர்வுக்கான ஒரு பொறிமுறை முன்மொழியப்பட்டுள்ளது. மாறிரும் உள்ளக மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளால் அரசியல் தீர்வு பிற்போடப்பட்டுக் கொண்டு வருகின்றது.

குறிப்பாக நிரந்தர அரசியல் தீர்வு 02





# மன்னாரில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 6 பேர் கைது

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் கிழக்கு கடற்கரைப் பகுதியான அரிப்பு - பண்டாரவெளி கடற்பரப்பில் கடற்படையால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடித்த 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த நடவடிக்கையின்போது ஒரு டிங்கி படகு மற்றும் 227 சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட கடலட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைத் தடுக்கும் நோக்கில் இலங்கைக் கடற்படை, தீவைச் சுற்றியுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமான தேடுதல் நடவடிக்கைகளையும் ரோந்துப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சிலாவத்துறை, அரிப்பு மற்றும் நானாட்டான் பிரதேசங்களைச் சேர்ந்த 22 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கடலட்டை மற்றும் இழுவைப் படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தீர்வுக்கான...

என்பது ஒரு புதிய அரசியல் யாப்பின் ஊடாகவே சாத்தியம் என்பது அனைவரும் அறிவர். புதிய அரசியல் யாப்பு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 51 வீதம் பெற்றால் தான் புதிய அரசியல் யாப்பு செல்லுபடியாகும்.

தற்போதுள்ள ஜனாதிபதி 42 வீதம் வாக்குகளையே பெற்றுள்ளார். எதிர்த் தரப்புக்களும் நிரந்தர தீர்வுக்கு சாதகமாக இருப்பார்களா என்பது கேள்விக் குறியே.

ஆகவேதான் நாங்கள் அரசியல் யாப்பிலே இருக்கும் அதிகாரங்களையும் ஏற்கனவே பறிக்கப்பட்ட அதிகாரங்களையும் மீள வழங்கி ஒரு நியாயமான அதிகாரப் பகிர்வை உடனடியாக மேற்கொண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்றோம். அது நிரந்தர அரசியல் தீர்வு அல்ல என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

அதேவேளை, நாட்டிலே ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்களினாலே நமது நிரந்தரமான அரசியல் தீர்வு என்பது தொடர்ந்தும் கானல் நீராகவே இருக்கின்றது. இதைத் தாண்டி நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி நாம் நகர்வதற்கு ஒரு பொறிமுறை அவசியமானது. அதை நாங்கள் ஏற்கனவே முன்மொழிந்துள்ளோம். பிராந்திய, சர்வதேச வல்லரசுகளின் பிரதிநிதிகள், ஐ.நா. பிரதிநிதிகள், புலம்பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச தரப்பு, உள்நாட்டு தமிழர் தரப்பு ஆகியோரை ஒன்றிணைத்து ஒரு உறுதியான பொறிமுறை உருவாக்கப்பட்டால்தான் அரசியல் தீர்வை நோக்கிக் காத்திரமாக நகர முடியும்.

அதில் நாம் மிகவும் பற்றுறுதியோடு இருப்பதோடு நடைமுறைப்படுத்துவதற்கு கட்சி நலன்கள், பதவி மோகங்கள், முரண்பாடுகளை களைந்து அனைவரையும் ஒன்றிணைப்போம். அதில் நாம் அர்ப்பணிப்போடு உள்ளோம். தேர்தலுக்குப் பின்னராக பிரதானமாக இந்தப் பொறிமுறையை உருவாக்குவதில் நாம் அர்ப்பணிப்போடு பயணிப்போம். அதுவே அரசுக்கு அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கும் தீர்வை எட்டுவதற்கும் சாத்தியமான வழிமுறையாகும்." - என்றுள்ளது.

### நல்லூர் பிரதேச சபை...

43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் கழுத்தில் சுருக்கிட்டதாலேயே மரணம் சம்பவித்தமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

### தமிழ்த் தேசியம்...

அவ்வாறெனில் முழு தமிழ்த் தேசமும் பட்டினி இருப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். முழு தேசமும் தங்களுடைய அனைத்துப் பிரச்சினைகளையும் ஒதுக்கிவிட்டு நாடு காண்பதற்குப் புறப்பட வேண்டும். அனால் இங்கு ஒருசாரார் தங்களை வளப்படுத்திக்கொண்டு போகும்போது மக்களில் பெரும்பாலானோர் தங்களுடைய நாளாந்த தேவைகளுக்காக அல்லல்பட்டுக் கொண்டிருக்கையில் பேச்சளவில் போலித் தேசியம் பேசுவதில் அர்த்தம் இல்லை.

துரோகிப் பட்டங்களுக்குப் பயப்படாமல் சில முன்னெடுப்புகளை அரசியல் தலைமைகள் முன்னெடுக்க வேண்டும். அதேநேரம் அதனை மக்களிடமும் புரியவைக்க வேண்டும். அவை இரண்டும் சம காலத்தில் நடைபெற வேண்டும்.

நான் எப்போதும் துரோகிப் பட்டங்களுக்கு பயப்பட்டது இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்திலே அவர்களின் தவறான விடயங்களை விமர்சித்த அதேவேளை போராட்டத்தோடு பயணித்தவள். எனவே, பட்டங்களுக்குப் பயப்படாமல் நாங்கள் சில செயல்களைச் செய்ய வேண்டிய காலம் இது. மக்களின் விருப்பங்களின் பாதையில் பயணிக்கும் அதேநேரம் அவர்களை வழிநடத்திச் சென்றால் எமது அரசியல் பயணம் தெளிவானதாக இருக்கும்." - என்றார்.



# திகாவும் நானும் நாடாளுமன்றத்தில் சகபாடிகள்! இம்முறையும் அவர் வெற்றி வாகை சூட வேண்டும்!!

## நூல் வெளியீட்டு விழாவில் மனோ உரை

"தம்பி திகாவும் நானும் நாடாளு மன்றத்தில் சகபாடிகளாக இருந்து பல்வேறு விடயங்களில் கலந்து பேசி பின்தங்கியிருந்த சமூகத்தின் நன்மைக் காகப் பாடுபட்டுள்ளோம்." – என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற "மலையகம் 200 – திகாம் பரம் 20" நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"சாதாரண தொழிலாளர் குடும் பத்தில் பிறந்து வளர்ந்து அரசியலில் இறங்கி, கெபினட் அமைச்சராகி சேவை செய்து மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திகாம்பரத்தின் வளர்ச்சியும் உயர்ச்சியும் பெருமைக் குரிய ஒன்றாகும்.

தான் பிறந்த மண்ணுக்குத் தேவை யான அபிவிருத்தியையும், மக்களின் வாழ்வில் மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய சிந்தனை யோடு அரசியலில் கால் பதித்த திகாம் பரம் அதை நடைமுறைப்படுத்திக் காட்டினார்.

இனவாதம், மதவாதம், பிரதேச வாதம், பொய், புரட்டு, பித்தலாட்ட வாதங்களுக்கு அப்பால் நேர்மையான அரசியலை முன்னெடுத்து வெற்றி கண்டுள்ளார்.

மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனையோடு தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆரம்பிக் கப்பட்டபோது அதில் பெரும் பங்கு வகித்துள்ளார்.

தம்பி திகாவும் நானும் நாடாளு மன்றத்தில் சகபாடிகளாக இருந்து பல்வேறு விடயங்களில் கலந்து பேசி பின்தங்கியிருந்த சமூகத்தின் நன்மைக் காகப் பாடுபட்டுள்ளோம்.

அவர் நல்லாட்சி அரசில் அமைச்ச ராக இருந்தபோது நுவரெலியா மாவட்டத் தில் பிரதேச சபைகள், செயலகங்கள் அதிகரிப்புக்கும் அதிகார சபை உருவாகு வதற்கும் காரணமாக இருந்ததை மலை யக வரலாறு நினைவுகூரும்.

அதேபோல், காணி உறுதிப்பத்தி ரங்களுடன் தனி வீட்டுத் திட்டத்தை ஏற்படுத்தி தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரத் திட்டமிட்டு செயலாற்றி வந்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி வாகை சூடி மலை யகம் எழுச்சி பெற அவரது சேவையைத் தொடர வேண்டும்." – என்றார்.



## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை

கூரிய ஆயுதத்தால் தாக் கப்பட்டுக் குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று சனிக் கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை, பொலொஸ் ஸகம பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய நபரே படு கொலை செய்யப்பட்டுள் ளார்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் 41 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட வில்லை.

இது தொடர்பான மேல திக விசாரணைகளை களுத் துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

## பதுளை பஸ் விபத்தில் சிக்கி காயமடைந்த பல்கலைக்கழக மாணவன் வைத்தியசாலையிலிருந்து தப்பியோட்டம்

பதுளை பஸ் விபத்தில் சிக் கிக் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவன் வைத்தியசாலை யிலிருந்து தப்பிச் சென்றுள் ளார் என்று பதுளை பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள் ளது.

ஜா – எல, அலெக்சாண்டர் மாவத்தை பகுதியில் வசிக்கும் 24 வயதுடைய பல்கலைக் கழக மாணவனே தப்பிச் சென் றுள்ளார்.



இந்த மாணவன் கடந்த முதலாம் திகதி பதுளை, துன்ஹிந்த – அம்பகஹஓய 5ஆவது மைல்கல் பகுதி யில் இடம்பெற்ற பஸ் விபத்தி லேயே சிக்கி காயமடைந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பதுளை பொலிஸார் ஈடுபட்டு வருகின் றனர்.



# ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் சாவகச்சேரி தொகுதி அலுவலகம் திறப்பு

(த.சுபேசன்)

ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் (சுயேச்சை குழு -14) சாவகச்சேரி தொகு திக்கான தேர்தல் அலுவலகம் இன்று (03) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நுணாவில் பகுதியை அண்மித்து ஏ-9 வீதியில் திறக்கப்பட்டுள்ளது.



ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப் பின் பொதுச் செயலாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி தலை மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனநாயகத் தமிழரசு கூட்டமைப்பின் (சுயேட்சைக்குழு -14) தலைவரும் முதன்மை வேட்பாளருமாகிய ஜனாதி பதி சட்டத்தரணி கே.வி.தவராசா உள் ளிட்ட வேட்பாளர்கள் கலந்து கொண் டனர்.








# அநுராதபுரம் எல்லாளன் சமாதியை வணங்கி தேர்தல் பரப்புரை ஆரம்பம்

## தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை அறிவிப்பு!

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டத்தில் தனித்துவமாக சுயேட்சை 21 இல் களமிறங்கியுள்ளது.

இந்த நிலையில் நேற்று (02) தமது யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டத்துக்கான தேர்தல் பரப்புரையின் தொடக்கத்தை அநுராதபுரத்தில் அமைந்துள்ள பேரரசன் எல்லாளன் சமாதியை வணங்கினர்.

பின்னர் ஊடகங்களை சந்தித்து தங்களது தேர்தல் கருத்துக்களை வழங்கினார்கள்.



அநுராதபுரம் கந்தசுவாமி ஆலய தரிசனம் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், அங்கிருக்கக் கூடிய ஒரு சில தமிழ் பொது அமைப்புக்களுடனும் சமகால அரசியல், சமுக நிலவரங்கள் தொடர்பிலும் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைவர், செயலாளர் மற்றும் முக்கிஸ்தர்கள் கலந்துரையாடினர்.



# வாசிப்பு மாத விழிப்புணர்வு!

(மஸ்கெலியா)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட பூண்டுலோயா பொது நூலகத்தின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

வாசிப்பின் மூலம் குழந்தைகளின் மன வளர்ச்சியை ஏற்படுத்துவது பற்றி அறியும் நிகழ்வாகப் பூண்டுலோயா கும்பலொலுவ கல்லூரியில் இடம் பெற்றது.

நுவரெலியா பிராந்திய கல்வி அலுவலகத்தின் உளவியல் ஆலோசகர் திருமதி அனோஜா ரத்நாயக்க இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான ஆதாரங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கும்பலொலுவ கல்லூரி மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஹாரிஸா? ட்ரம்பா?

உலகத்தின் பொலிஸ்காரன் என்று தன்னைக் கருதிக் கொள்ளும் அமெரிக்கா அடுத்த நான்கு ஆண்டுகளுக்குத் தன்னுடைய நாட்டை வழி நடத்தப் போகின்ற ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாளை மறுதினம் தேர்தலுக்குச் செல்கின்றது.

வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகி விட்டன.

முதலில் 2020 ஜனாதிபதி தேர்தல் போல இதுவும் நேரடியாக ஜனநாயகக் கட்சியின் அதிபர் ஜோ பைடனுக்கும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கும் இடையிலான மோதலாக இருக்கும் என எதிர்பார்க்கப் பட்டது. ஆயினும் கடைசி நேரத்தில் தமது தள்ளாமை கருதி தேர்தலில் இருந்து அதிபர் ஜோ பைடன் விலக வேண்டி நேரிட்டமையால் அவரது துணை அதிபரான - இந்திய வம்சாவளையைச் சேர்ந்த - கமலா ஹாரிஸ் நேரடியாகக் களத்தில் குதித்திருக்கிறார்.

நாளை மறுதினம் நடக்கப் போகின்ற வாக்களிப்பில் அமெரிக்க மக்கள் என்ன தீர்மானம் எடுக்கப் போகின்றார்கள்? முதலாவது பெண் ஜனாதிபதியாக ஹாரிஸைத் தேர்ந்தெடுக்க போகின்றார்களா? அல்லது முன்னாள் ஜனாதிபதி ட்ரம்புக்கு இரண்டாவது பதவிக்காலத்தை வழங்கப் போகின்றார்களா?

தேர்தல் ஓட்டப் போட்டி மிக நெருக்கமாக - கடுமையாக - இருப்பதாகக் களத் தகவல்கள் கூறுகின்றன.

சில மாதங்களுக்கு முன்னர்தான் நேரடியாகத் தேர்தல் களத்துக்குள் வந்த கமலா ஹாரிஸ் அப்போது ட்ரம்பை விட மூன்று, நான்கு சதவீதம் அதிக ஆதரவு உடையவராகக் காணப்பட்டாலும் கடைசி நேரத்தில் தமது பிரசார உத்திகள், நடவடிக்கைகள் மூலம் நெருங்கி வந்திருக்கிறார் டொனால்ட் ட்ரம்ப்.

கடைசி கட்ட கணிப்புகளின் படி டொனால்ட் டிரம்பின் 47 சதவீத ஆதரவிலும் விட ஒரு வீதம் அதிகமாக - 48 சதவீத ஆதரவுடன் - தேசிய மட்டத்தில் கமலா ஹாரிஸ் முன்னணியில் இருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

ஆயினும் இந்த வாக்கு முன்னிலை என்பது வெற்றியை உறுதிப்படுத்தாது என்பது முக்கியமான விவகாரமாகும்.

தேசிய மட்டத்தில் மொத்த வாக்குகளை அதிகம் எடுத்தவர்களை, விட குறைந்த வாக்கு எடுத்தவர்கள் அதிக பிரதிநிதித்துவ வாக்குகளுடன் தேர்தலில் வென்ற சரித்திரம் அமெரிக்காவில் உண்டு.

மக்கள் தொகையைப் பொறுத்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் குறிப்பிட்ட பிரதிநிதிகள் வாக்குகள் (Electoral College) இருக்கும். உதாரணத்துக்கு கலிபோர்னியாவுக்கு 54 பிரதிநிதித்துவ வாக்குகளும், டெக்ஸாஸுக்கு 40 வாக்குகளும் உண்டு. 50 மாநிலங்கள் மற்றும் தலைநகரப் பகுதியான வொஷிங்டன் டி.சியையும் சேர்த்தால், மொத்தம் 538 பிரதிநிதித்துவ வாக்குகள் உண்டு. இதில் 270 வாக்குகளுக்கு மேல் பெறும் வேட்பாளர் அதிபராவார்.

ஒருவகையில், வாக்காளர்கள் மாகாண அளவில் கட்சிகளின் பிரதிநிதிகளைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். தேசிய அளவில் போட்டியிடும் வேட்பாளர்களை அல்ல. அந்தக் கட்சிகளின் பிரதிதிகள்தாம் பின்னர் அதிபரைத் தேர்ந்தெடுக்கின்றார்கள்.

ஒரு மாநிலத்தில் அதிக அளவு வாக்குகளை பெற்று அந்த மாநிலப் பிரதிநிதித்துவ வாக்குககளை சுவீகரித்துக் கொண்டாலும், மற்றைய மாநிலங்களை குறைய வாக்கு வித்தியாசத்தில் வென்று அந்த மாநிலங்களுக்குரிய பிரதிநிதித்துவ வாக்குககளைப் பெறுவதன் மூலம் ஒருவர் ஜனாதிபதியாகி விட முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் தேசிய மட்டத்தில் மொத்தமாக அளித்த வாக்கில் குறைந்த எண்ணிக்கையை பெற்றவர் கூட ஜனாதிபதியாகி விட இயலும். ட்ரம்ப் தமது முதலாவது வெற்றியை அப்படித்தான் சுவீகரித்துக் கொண்டார்.

ஆகவே தேசிய மட்டத்தில் ஒரு சதவீத வாக்கை அதிகமாக ஹாரிஸ் பெற்றிருக்கிறார் என்பது அவருக்கு வெற்றிக்கான வாய்ப்பாக கருதப்பட முடியாதது.

ஒவ்வொரு மாநிலத்துக்கும் வித்தியாசமான பிரதிநிதித்துவ வாக்குககள் உண்டு. அந்த மாநிலங்களை வென்று, அதிக பிரதிநிதித்துவ வாக்குகளை ஈட்டுவதன் மூலமே அதிபராக முடியும்.

யாருக்கு வாய்ப்பு என்பது இன்னும் இரண்டு, மூன்று நாள்களில் தெரிந்துவிடும். அப்போது சர்வதேச சமூகத்தின் தலைமை வழிநடத்துனராகச் செயல்பட போகின்ற அதிபர் யார் என்பதை உலகம் கண்டுகொள்ளும். அது ஹாரிஸா? டிரம்பா? இன்னும் இரண்டு, மூன்று நாள்கள் பொறுத்திருந்தால் தெரிந்து விடும்.

# இரண்டாம் தேசிய மொழிப் போட்டியில் மஹ்மூத் மாணவிகள் தேசிய நிலைக்கு

(நூருல் ஹுதா உமர்)



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) தினப் போட்டி - 2024 நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு நல்லையா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்த போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) சார்பாக தரம் 06 தொடக்கம் 09 பிரிவு வரையான மாணவிகள் பேச்சு, வாசிப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்று முதலாம், இரண்டாம் நிலைகளை பெற்று மூன்று மாணவிகள் தேசிய மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அதில் தரம் - 08 மாணவி ஐ.ஐ. சுமையா எழுத்து போட்டியில் கலந்து கொண்டு முதலாம் நிலையும், தரம் - 06 மாணவி எம்.ஜ. அமீஹா சஹ்தா எழுத்து போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் நிலையும், தரம் - 09 மாணவி ஜீ.எப். சுக்னா ஹானிம் எழுத்து போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் நிலையும் பெற்றுள்ளனர்.

தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கான தேசிய மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) தினப் போட்டி - 2024 நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 03 ஆம் திகதி கல்வி அமைச்சு, இசுறுபாய பத்தரமுல்ல கொழும்பில் இடம்பெறவுள்ளது.

மொழிப் பிரயோகமும் கிரகித்தலும் போட்டி நிகழ்ச்சியில் மாணவி வெற்றி பெற உற்சாகமளிக்கும் நோக்குடன் குறித்த மாணவிகளை அதிபர் அலுவலகத்துக்கு நேரடியாக அழைத்து கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

மாகாண மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) போட்டி நிகழ்ச்சிக்கு மாணவிகளைத் திறம்பட வழிப்படுத்திய சிங்கள பாட இணைப்பாளர் ஏ.எம்.எம். அனிஸ் சிங்கள பாட ஆசிரியர்களான ஏ.எம். நௌஷாத், எம்.ஜ.எப். பாத்திமா சபானா, பாத்திமா ஸபினா மற்றும் சாதனை படைத்த மாணவிகளுக்கும் பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக அதிபர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிமனையின் சிங்கள பாட ஆசிரிய ஆலோசகர் ஆர். ஸ்ரீஸ்கந்த ராஜா பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மக்களுக்கு நிம்மதி இல்லை என்றால் கட்சிகளும், தலைமைகளும் எதற்கு?

## வேட்பாளர் சபீஸ் காட்டம்



(மாளிகைக்காடு நிருபர்)

நிவாரணம் கொடுப்பதன் மூலம் மக்களை நிம்மதியாக வாழ வைக்க முடியாது. இளைஞர்களை சொந்த முயற்சியின் மூலம் தொழில் வழங்குனர்களாக மாற்றினால் மாத்திரமே மக்கள் நிம்மதியாக வாழ்வர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மயில் சின்னம் 10 ஆம் இலக்கத்தில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.எம்.சபீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

சம்மாந்துறையில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

கடந்த வருடம் இஸ்மாயில் புரத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக போயிருந்தேன் அவ்வேளையில் அதிபரிடம் உங்கள் கணித பாட ஆசிரியர் யார் என்று கேட்டேன். தசாப்தங்களுக்கு மேல் கணித பாட ஆசிரியர் இந்த பாடசாலைக்கு இல்லை என்று சொன்னார்.

இதைவிட கேவலம் என்ன இருக்க முடியும். அதிகாரிகளை தொடர்பு கொண்டு உங்கள் பிள்ளைகள் நல்ல முறையில் படியாது என்று சொன்னேன். தன் நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலையில் கணித பாட ஆசிரியர் இல்லை என்றால் அந்த பிள்ளைகள் எவ்வாறு வாழ்வில் முன்னேறுவார்கள் என்று கேட்டேன்.

என்னைப் பொறுத்தமட்டில் 20 வயதுக்குள் தகுதி உடைய அனைத்துக் குழந்தைகளும் பட்டப்படிப்பை நிறைவு செய்பவர்களாக மாறினால் மாத்திரம் மக்கள் நிம்மதியாக வாழும் முறைமையை தோற்றுவிக்கலாம்.- என்றார்.





# கல்முனைக்குத் துரோகமிழைப்பு!

## சாய்ந்தமருது மக்கள் சந்திப்பில் ஜெமீல்

(மாளிகைக்காடு)

காலம் காலமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தன்னகத்தே வைத்திருந்த கல்முனை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் எச்.எம்.எம். ஹரீஸ்க்குத் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டதன் ஊடாக தனக்கான பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்க பாரிய சதி ஒன்றை அரங்கேற்றியுள்ளனர்.

சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் இடம்பெற்ற பாரிய அளவிலான பெண்கள் பங்கு கொண்ட சந்திப்பு ஒன்றில் புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னம், மூன்றாம் இலக்கத்தில் போட்டியிடும் கலாநிதி ஏ.எம். ஜெமீல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்க்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளதை அறிந்து, கல்முனைக்கான பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை உணர்ந்த நான், புதிய ஜனநாயக முன்னணியின் ஊடாக எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சகோதரர் ஹரீஸ்க்கு வழங்கி கல்முனையை அழகு பார்க்க விரும்பினேன்.

என்றாலும் அவர் மனதளவில் உடைந்திருந்ததால் என்னை களத்தில் இறங்குமாறும் எனக்கு உதவுவதாகவும் கூறினார். அதன் பின்னரே இறுதி நேரத்தில் கையொப்பமிட்டு தேர்தலில் இறங்கியுள்ளேன்.

நமது பிராந்தியம் பல்வேறு தேவைகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது. மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது என்றால் மக்களின் சார்பில் சிறந்த பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும். தற்போது களத்தில் இறங்கியுள்ளவர்களுடன் என்னையும் ஒப்பிட்டு நான் சிறந்தவன் என்றால் எனக்கு வாக்களியுங்கள்.

கடந்த காலங்களில் எனக்குக் கிடைத்த அதிகாரங்களை வைத்து இந்த பிராந்தியத்துக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்களை செய்துள்ளேன். அத்துடன் நமது பிராந்தியத்தில் பாரிய பல்கலைக்கழகம் ஒன்று உருவாக மறைந்த தலைவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன்.

நான் சாதாரண குடும்பத்தில் பிறந்து கல்விகற்று, என்னால் முடிந்தவைகளை செய்துள்ளேன். நமது பிராந்தியத்தினதும் மக்களதும் தேவைகளை நன்கு அறிந்தவன. மக்களின் பணிக்காக என்னை எப்பவோ அர்ப்பணித்துள்ளேன்.

எனது அழைப்பை ஏற்று இங்கு மக்கள் கூடியுள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் எப்போதும் பின்னிற்க மாட்டேன்.- என்றார்.

நிகழ்வின்போது ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவரும், தேசியப்பட்டியல் வேட்பாளருமான கலாநிதி அன்வர் எம். முஸ்தபா, அந்தக் கட்சியின் தேசிய கொள்கை பரப்பு செயலாளர் நூருல் ஹுதா உமர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இணைப்பாளர் பர்சாத் கான், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சுகைல் அஸீஸ் சிரேஷ்ட அறிவிப்பாளர் ரோஷன், அஸ்வர் அப்துல் சலாம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.



# புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் அலுவலகம் சாய்ந்தமருதில்

(மாளிகைக்காடு)

திகாமடுல்ல மாவட்ட புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னம், மூன்றாம் இலக்க வேட்பாளர் ஏ.எம். ஜெமீலின் தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் இன்று (03) சாய்ந்தமருது கடற்கரை வீதியில் சாய்ந்தமருது மக்களின் முன்னிலையில் சமூக செயற்பாட்டாளர் எம். பைஸர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் சமூகத்துக்கும் அம்பாறை மாவட்டத்துக்கும் சாய்ந்தமருது மண்ணுக்கும் வேட்பாளர் ஏ.எம். ஜெமீல் செய்த சேவைகள் பற்றி நன்றியுடன் நினைவு கூர்ந்த சாய்ந்தமருது பொது மக்கள் தமது ஆதரவை அணி திரண்டு வெளியிட்டனர்.

புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னம், மூன்றாம் இலக்க வேட்பாளர் ஏ.எம். ஜெமீலின் கரத்தைப் பலப்படுத்தி ஜெமீலின் வெற்றிக்காக முழுமையாகக் களத்தில் இறங்கி தேர்தல் பணி செய்ய முன்வந்துள்ளார்கள்.

இந்த தேர்தல் செயற்பாட்டு அலுவலகத் திறப்பு விழாவில் ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவரும், தேசியப்பட்டியல் வேட்பாளருமான கலாநிதி அன்வர் எம். முஸ்தபா, அந்தக் கட்சியின் தேசிய கொள்கை பரப்பு செயலாளர் நூருல்ஹுதா உமர், காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் ஏ.எம். ஜாஹீர், நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஜெயா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.



# நடமாடும் நூலகம் திறந்து வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

அரச சுற்று நிறுபத்துக்கு அமைய நூலக வாரத்தை முன்னிட்டு தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் 2024 “வழிகாட்டும் தாரகைகளாம் நூல்கள் வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்” எனும் தொனிப்பொருளில் நடமாடும் நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் தலைமையில் பச்சை வீடு இடத்தில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் நூலகத் திறப்பு நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். நடமாடும் நூலகத்தில் சமயம், அகராதிகள், நாவல், கல்வி, அறிஞர்கள், பாடப்புத்தகத்துடன் தொடர்பான நூல்கள், செய்தி பத்திரிகைகள், கவிதைகள், சஞ்சிகைகள் எனப் பல்துறை சார்ந்த நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இடைவேளை நேரத்தில் கல்லூரி சமூகத்தினர் பயன்பெறும் வகையிலும் வாசிப்பை மாணவி மத்தியில் சமூகமயப்படுத்துவற்கான ஏற்பாடுகள், ஆலோசனைகள், வழிகாட்டல்களைக் கல்லூரியின் நூலகப் பொறுப்பாளர் ஏ.எல். நளீம வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச் நதிரா, உதவி அதிபர் எம்.எஸ் மனுானா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் கலந்து கொண்டனர்.




# மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு

(த.சுபேசன்)

மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெற்றது.

கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் திருமதி பி.விசாகன் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமை யாளர் கோடீஸ்வரன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் ஓய்வு பெற்ற விரிவுரையாளர் கமலநாதன், போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் அபராஜிதன், யாழ். மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் திரு மதி சுரேஸ்குமார் மற்றும் மக்கள் வங் கியின் யாழ். பிராந்திய முகா மையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.









# கிளிநொச்சி மகிழங்காட்டில் இயந்திர நாற்று நடுகை விழா

(த.சுபேசன்)

கிளிநொச்சியின் மகிழங்காடு கிராமத்தில் கிளிநொச்சி கொமர்ஷல் வங்கியும் அதன் அபிவிருத்தி கடன் பிரிவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் வழிகாட்டலுடன் விவசாய நவீன மயப்படுத்தல் தொழில் நுட்பத்தை விவசாயிகள் மத்தியில் அறிமுகம் செய்து வைத்துள்ளன.

இந்த நிலையில் இயந்திர நாற்று நடுகை விழா அண் மையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி, கொமர்ஷல் வங்கி வட பிராந்திய முகாமையாளர், இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தின் பிரதம எந்திரி, கமநல சேவைகள் திணைக்கள அபிவிருத்தி அதிகாரி மற்றும் ஊழியர்கள், மகிழங்காடு விவசாய அமைப்பினர், மகிழங்காடு கிராமம்



சார் விவசாய பெரு மக்கள் மற்றும் கொமர்ஷல் வங்கி கிளிநொச்சி கிளை முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

கொமர்ஷல் வங்கியின் நிலைபேறு தன்மையை நிலைநாட்டும் நோக்குடன் 100,000 மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் இந்நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# புத்தக வெளியீட்டு விழாவில் திருமாவளவன், விஜய் பங்கேற்பு

சென்னையில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் புத்தக வெளியீட்டு விழாவில் வி.சி.க. தலைவர் திருமாவளவன், த.வெ.க. தலைவர் விஜய் ஆகியோர் பங்கேற்க இருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆட்சி, அதிகாரத்தில் பங்கு என்ற முழக்கத்தை 1999 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வி.சி.க. முன்வைத்து வருகிறது. செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் கடந்த செப்டெம்பர் 12 ஆம் திகதி நிர்வாகிகளுடன் பேசும் போது, ஆட்சியில் பங்கு தொடர்பான கருத்தை திருமாவளவன் தெரிவித்திருந்தார்.

இந்த காணொலி, வெளிநாட்டு பயணத்தை முடித்து முதல்வர் தமிழகம் திரும்பிய நிலையில், திருமாவளவனின் சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்து நீக்கப்பட்டது சர்ச்சையானது. எனினும், இந்த கருத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என திருமாவளவன்



உறுதிபட தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, வி.சி.க. துணை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜ/னா, வி.சி.க. இல்லாமல் வட மாவட்டங்களில் தி.மு.க. வென்றிருக்க முடியாது என்பது உள்ளிட்ட விமர்சனங்களை தெரிவித்த நிலையில், கூட்டணியில் விரிசல் ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்டது. ஆனால், கூட்டணியில் தொடர்கிறோம் எனக் கூறி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் திருமாவளவன்.

இந்நிலையில், கடந்த 27 ஆம் திகதி தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டை நடத்திய கட்சித் தலைவர் விஜய், கூட்டணியில் சேருவோருக்கு ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்று அறிவித்தார். இதன்மூலம் அவர் வி.சி.க. உள்ளிட்ட கட்சிகளுக்கு மறைமுகமாக கூட்டணி அழைப்பு விடுப்பதாக பேசப்பட்டது.

விஜய்யின் ஆட்சியில் பங்கு தொடர்பான கருத்துக்கு வி.சி.க. துணை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா ஆதரவு தெரிவித்த நிலையில், வி.சி.க. தலைவர் திருமாவளவன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக வி.சி.க. தலைவர் திருமாவளவனோ, “பண்டிகை காலத்து தள்ளுபடி விற்பனைபோல” ஆட்சியதிகாரத்தில் பங்கு என்ற அரசியல் உத்திவெளிப்பட்டுள்ளது என கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இந்த கருத்து மோதல்களுக்கு இடையே, இரு தலைவர்களும் சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஒரே மேடையை பகிர்ந்து கொள்ள இருக்கின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

# நடிகர் விஜய்யை அ.தி.மு.கவினர் எவரும் விமர்சிக்க வேண்டாம்

## நிர்வாகிகளுக்கு பழனிசாமி அறிவுறுத்தல்



த.வெ.க. தலைவர் விஜய், அ.தி.மு.கவை விமர்சிக்கவில்லை என்பதால் அவரை அ.தி.மு.கவினர் விமர்சிக்க வேண்டாம் என்று கட்சி நிர்வாகிகளுக்கு பொதுச்செயலாளர் பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ள நடிகர் விஜய், கடந்த 27 ஆம் திகதி விக்கிரவாண்டியில் கட்சியின் முதல் மாநாட்டை நடத்தினார். அப்போது, கூட்டணி கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு என அறிவிப்பை வெளியிட்டார்.

மேலும் அந்த மாநாட்டில் பா.ஜ.க, தி.மு.க.கட்சிகளை விமர்சித்து, தனது கொள்கை எதிரி யார், அரசியல் எதிரி யார் என்பதையும் விஜய் தெரிவித்துவிட்டார். எம்.ஜி.ஆரையும் பாராட்டி பேசினார்.

இந்நிலையில், தீபாவளிக்கு முன்பு கட்சி நிர்வாகிகள், பழனிசாமியை சென்னையில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது விஜய் மாநாட்டு பேச்சு குறித்து பழனிசாமியிடம் நிர்வாகிகள் விவாதித்துள்ளனர்.

அப்போது, விஜய்யை விமர்சிக்கலாமா என நிர்வாகிகள் கேட்டபோது, நமது தலைவரின் சிறப்பை விஜய் விவரித்துள்ளார். நம்மைபற்றி அவர் எதுவும் விமர்சிக்கவில்லை என்பதால், அ.தி.மு.கவினரும் விஜய்யை விமர்சிக்கவேண்டாம் என்று பழனிசாமி நிர்வாகிகளிடம் அறிவுறுத்தினார் என கூறப்படுகிறது.

# ஜல்லிக்கட்டு போட்டிக்கான போராட்டம்போல கள்ளுக்கான போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும்

## நல்லசாமி நம்பிக்கை

ஜல்லிக்கட்டு போராட்டம் வெற்றி பெற்றதுபோல, கள்ளுக்கான போராட்டமும் நிச்சயம் வெற்றிபெறும் என்று தமிழ்நாடு கள் இயக்க கள ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி கூறினார்.

கரூரில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“கள் என்பது போதைப் பொருள் அல்ல. நமது உணவின் ஒரு பகுதியாகும். கள் இறக்குவதும், பருகுவதும் அரசமைப்புச் சட்டம் மக்களுக்கு கொடுத்திருக்கும் உணவு தேடும் உரிமையாகும். இதையொட்டி, 2025 ஜனவரி 21 ஆம் திகதி கள் இறக்கி சந்தைப்படுத்துவோம்.

அரசமைப்புச் சட்டத்தின்படி கள் இறக்கினால், மதுவிலக்குச்சட்டப்படி தமிழக அரசு நடவடிக்கை எடுக்கிறது. அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டது



மதுவிலக்கு சட்டமா? மதுவிலக்கு சட்டத்துக்கு உட்பட்டது அரசமைப்புச் சட்டமா என்பது தொடர்பாக தமிழக அரசு பதில் அளிக்க வேண்டும்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுப் போராட்டம் வெற்றி பெற்றதுபோல, கள்ளுக்கான போராட்டமும் வெற்றி பெறும். நடிகர் விஜய்கட்சி தொடங்கியதில் தவறில்லை. ஆனால், உரிய புரிதலின்றி அரசியலில் இறங்கி ஆட்சியைப் பிடித்தால், நாட்டை கெடுத்ததாக அவப்பெயர்தான் மிஞ்சும்.” – என்றார்.



# காசாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 55 பேர் பலி

காசா முழுவதும் கடந்த 24 மணித்தியாலங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் 55 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தாக்குதலில் 192 பேர் வரை காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் இஸ்ரேலிய படைகள் 10 பாலஸ்தீனியர்களை கைது செய்துள்ளது.

இதேவேளை, இரண்டாம் கட்ட போலியோ தடுப்பூசி வேலைத்திட்டத்தின் இறுதிக் கட்டம் வடக்கு காஸாவில் நேற்று தொடங்கப்பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தீவிர இஸ்ரேலிய குண்டுவீச்சுகள், பாரிய இடப்பெயர்வு மற்றும் பிராந்தியத்தில் அணுகல் இல்லாமை போன்ற காரணங்களால் இரண்டாவது கட்ட போலியோ தடுப்பூசி திட்டம் கடந்த மாதம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், போலியோ தடுப்பூசி வேலைத்திட்டத்தின் போது வரிசையில் நின்ற 6 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை மறுதினம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

# ட்ரம்ப்- கமலா ஹாரிஸ் இறுதிக்கட்ட பிரச்சாரம்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நாளை மறுநாள் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் ஆளும் ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. இதன்படி அந்த நாட்டில் நவம்பர் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸும், குடியரசு கட்சிசார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடுகின்றனர். இருவரும் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் அதிதீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.



அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாகாணம், மில்வாகி நகரில் நேற்று நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் கமலா ஹாரிஸ் பேசும்போது,

“எனது தேர்தல் பிரச்சாரத்தில் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் குறித்து மட்டுமே பேசி வருகிறேன். குறிப்பாக சுகாதார திட்டங்கள், குறு, சிறு தொழில்களின் வளர்ச்சி, நடுத்தர வர்க்க மக்களின் முன்னேற்றம் குறித்து பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளேன். ஆனால் டொனால்ட் ட்ரம்ப், பழிவாங்கும் நடவடிக்கைகள் குறித்து பேசி வருகிறார். மனித குலத்துக்கு எதிரான கருத்துகளை கூறி வருகிறார்.” – என்றார்.

குடியரசு கட்சி வேட்பாளர் ட்ரம்ப், மிச்சிகன் மாகாணம் டிட்ராயிட் நகரில் நேற்று பேசும்போது,

“கமலா ஹாரிஸ் மார்க்சிஸ்ட் சிந்தனை கொண்டவர். அவரது ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் பொருளாதாரம் மிகப்பெரிய சரிவை சந்தித்துள்ளது. நான் ஜனாதிபதியானால் அமெரிக்காவுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுப்பேன். அமெரிக்கர்களின் வேலைவாய்ப்பை வெளிநாட்டினர் பறிக்க அனுமதிக்க மாட்டேன். உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவேன். 3 ஆம் உலகப் போரை தடுத்து நிறுத்துவேன்.” – என்றார்.


அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தேசிய அளவிலும் மாகாண அளவிலும் கருத்துக் கணிப்புகள் வெளியாகி வருகின்றன. தேசிய அளவில் சில கருத்துக்கணிப்புகள் கமலாவுக்கு ஆதரவாகவும் வேறு சில கணிப்புகள் ட்ரம்புக்கு ஆதரவாகவும் உள்ளன. எனினும் பெரும் பாலான கணிப்புகளில் இருவருக்கும் இடையிலான வாக்கு சதவீதத்தின் இடைவெளி ஒரு சதவீதமாக உள்ளது.

பக்கங்கள் 03
கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 03/11/2024

## சடலமாக மீட்கப்பட்ட யுவதியின் குடும்பத்துக்கு குவியும் உதவிகள்

கனடாவில் அண்மையில் பேக்கரி ஒன்றின் ஓவனுக்குள் சிக்கி உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் கனடாவிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலகின் முதல் நிலை 02




# சைபர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்: இந்தியா மீது கனடா அரசு புகார்

**தமது நாட்டின் சைபர் பாதுகாப்புக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக இந்தியா உள்ளது என, கனடா கூறியுள்ளது. இதற்கு மத்திய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.**

**காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை தொடர்பான விவகாரத்தில் கனடா தொடர்ந்து நம் நாடு மீது பல புகார்களை கூறி வருகிறது.**

இந்நிலையில், கனடாவின் சைபர் பாதுகாப்பு மையம் சமீபத்தில், 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது. மேலும், எதிரி நாடுகள் பட்டியலிலும் இந்தியாவின் பெயரை சேர்த்துள்ளது.

கனடா சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல் அறிக்கையில் குறிப்பிடுகையில், "உள்நாட்டு சைபர் திறன்கள் வாயிலாக அதிநவீன சைபர் திட்டங்களை உருவாக்குவதில், இந்திய தலைமை தீவிரமாக உள்ளது.

உளவு, பயங்கரவாத எதிர்ப்பு போன்ற பாதுகாப்பு கட்டா

02



# அமித் ஷாவுக்கு எதிரான கனடாவின் குற்றச்சாட்டுக்கு இந்தியா கண்டனம்

இந்திய மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு எதிரான கனடாவின் குற்றச்சாட்டு தொடர்பாக கடும் கண்டனத்தைத் தெரிவித்ததாக இந்தியா தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரன்திர் ஜெய்ஸ்வால் கூறுகையில்,

"நாங்கள் கனடாவின் உயர் தூதரக அதிகாரியை அழைத்து, கனடாவின் பொதுப் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு நிலைக்குழுவில் நடந்த விஷயங்கள் குறித்து தூதரக ரீதியில் ஒரு குறிப்பைக் கொடுத்தோம்.

02



## சடலமாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனை நிறுவனங்களில் ஒன்றான வோல்மார்ட் நிறுவனத்தின் பேக்கரி ஓவன் ஒன்றிற்குள் இளம் யுவதி ஒருவர் சிக்கி உயிரிழந்திருந்தார்.

ஹாலிபெக்ஸ் பகுதியில் இந்த சம் பவம் இடம்பெற்று இருந்தது.

இந்த சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த யுவதியொருவர் உயிரிழந்தி ருந்தார்.

இந்த யுவதியின் தந்தை மற்றும் சகோதரர் ஆகியோர் இந்தியாவிலிருந்து கனடாவிற்கு வருகை தர தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உதவ உள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

யுவதியின் இறுதி சடங்குகளில் பங்கேற்பதற்காக அவர்கள் கனடா வருகை தர உள்ளனர். இந்தப் பெண் ணின் தாயும் இந்தப் பெண்ணும் சுமார் இரண்டு ஆண்டுகளாக மேற்படி நிறு வனத்தில் பணியாற்றி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தப் பெண் கனடாவில் குடியேறியி னார். சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த இந்த யுவதியின் குடும்பத்திற்கு உதவும் நோக்கில் சுமார் 2 லட்சம் டொலர்கள் நிதி திரட்டப்பட்டுள்ளது.

---

## சைபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யங்கள், சர்வதேச அளவில் தன் நிலையை உயர்த்திக் கொள்வதுடன், தன் மீதான எதிர்மறையான பிம்பங் களை தகர்க்க வேண்டும் என்பது இந் திய அரசின் நோக்கமாக உள்ளது.

இதற்காக உருவாக்கப்படும் சைபர் திட்டங்கள், தனியார் வாயிலாக இயங்க உள்ளது. கனடாவை உளவு பார்ப்பதற்காக இந்தியா இந்த முயற்சியை மேற்கொள்கிறது.

கனடா அரசுக்கு எதிராக பயன்படுத் துவதற்கான அச்சுறுத்தலும் அதிகம் உள்ளது. இந்தியாவால் உருவாக்கப் படும் இந்த சைபர் அச்சுறுத்தல் வாயிலாக, இரு தரப்பு உறவில் மிரட் டல் இருக்கும் என்று கணிக்கிறோம்.

உலக அளவில் வலுவான நாடாக தன்னை காட்டிக் கொள்வதற்காக, இந்தியா உருவாக்கி வரும் இந்த சைபர் திட்டங்கள், கனடாவுக்கு நிச்ச யம் பெரிய அச்சுறுத்தலாகவே இருக் கும்."- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், அந்த அறிக்கையில், கனடா வின் முக்கிய எதிரி நாடுகள் பட்டியலில் சீனா, ரஷ்யா, ஈரான், வட கொரியா ஆகியவற்றுடன் இந்தியாவின் பெயர் முதல் முறையாக சேர்க்கப்பட்டுள்ளது.

இதற்கு மத்திய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ் வால் இதுகுறித்து நேற்று தெரிவிக் கையில்,

"இந்தியாவுக்கு அவப்பெயரை ஏற் படுத்தும் முயற்சிகளில் கனடா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில், இந்த அறிக்கை ஒரு மிகச் சிறந்த உதாரணம்.

உலக அரங்கில் இந்தியாவின் பெய ருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத் தோடு, அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகைக்கு தகவல்களை கசிய விட்டதாக, கனடாவின் அமைச்சர், உயர் அதிகாரி சமீபத்தில் ஒப்பு கொண் டுள்ளனர்.

இதில் இருந்து எவ்வித ஆதாரமும் இல்லாமல், இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து பொய் குற்றச்சாட்டுகளை கூறுவது, கனடாவின் வழக்கம் என்பது மீண்டும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது."- என்றார்.

---

## அமித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குறிப்பில், கனடாவின்துணை வெளியுறவு அமைச்சர் டேவிட் மோரிசன் நிலைக் குழுவின் முன்பு இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு எதிராக தெரி வித்த அபத்தமான தும், ஆதாரமற்றதுமான குற்றச் சாட்டுகளுக்கு இந்திய கடும் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது. இது போன்ற பொறுப்பற்ற செயல்கள் இருதரப்பு உறவுகளில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்." என்று தெரிவித்தார்.

முன்னதாக, கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகள் குறிவைக்கப்பட் டதற்கு இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் உத்தரவே காரணம் என்று வொஷிங்டன் போஸ்ட் பத்தி ரிகைக்கு தான்தான் கூறியதாக கனடா துணை வெளியுறவு அமைச்சர் டேவிட் மோரிசன் தெரிவித்திருந்தார். இந்த விவகாரம் குறித்து சமீபத்தில் செய்தி வெளியிட்ட அமெரிக்காவின் வொஷிங் டன் போஸ்ட், கனடாவில் சீக்கிய பிரி வினைவாதிகள் மீதான தாக்குதல் களுக்கு 'இந்தியாவில் உள்ள மூத்த அதிகாரி' ஒருவர் அங்கீகாரம் அளித் ததாகவும், அது குறித்த ஆதாரங்களை கனடா பாதுகாப்பு முகமைகள் சேகரித் ததாகவும் கூறியிருந்தது. அந்த மூத்த அதிகாரி யார் என்ற கேள்விக்கு பின் னர் அமித் ஷா என அந்தப் பத்திரிகை தெரிவித்திருந்தது.

இதன் தொடர்ச்சியாகவே, கனடா வில் சீக்கிய பிரிவினைவாதிகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு அங் கீகாரம் அளித்தது அமித் ஷாதான் என்ற தகவலை வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு அளித்தது தான்தான் என கனடாவின் வெளியுறவுத்துணை அமைச்சர் டேவிட் மோரசின் தெரி வித்திருந்தார்.

முன்னதாக, காலிஸ்தான் பிரி வினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு கனடாவில் கொல் லப்பட்டதற்கு நரேந்திர மோடி அரசு உதவியதாக நம்பகமான குற்றச் சாட் டுக்கள் இருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறி இருந்தார்.

இந்த விவகாரம் இரு தரப்பு உறவில் பெரும் விரிசல் ஏற்பட காரணமாக இருந்தது. ஜஸ்டின் ட்ரூடோவின் குற்றச்சாட்டை அடுத்து கனடாவில் உள்ள 41 தூதரக அதிகாரிகளை இந்திய திரும்ப அழைத்துக்கொண்டது. இந்தியாவில் இருந்தும் கனடா நாட்டு தூதர்களை வெளியேற உத்தரவிட்டது.

# கனடாவில் வாகன அபகரிப்புடன் தொடர்புடைய 59 பேர் கைது



கனடாவில் வாகன அபகரிப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய 59 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக சுமார் 300 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் முதல் இந்த வாகன அபகரிப்பு சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 363 வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் இவற்றின் சந்தைப் பெறுமதி சுமார் 14 மில்லியன் டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அபகரிப்பு வாகனங்கள் போலியான ஆவணங்களை பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்கள் உடனடியாக உதிரிப் பாகங்களாக பிரிக்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# முக்கிய புலம்பெயர்தல் திட்டங்களை இடைநிறுத்தியது கியூபெக் மாகாணம்

கனடாவின் கியூபெக் மாகாணம் இரண்டு முக்கிய புலம்பெயர்தல் திட்டங்களை இடைநிறுத்தியுள்ளது.

கனடாவின் கியூபெக் மாகாணம், பொருளாதார புலம்பெயர்ந்தோர் மற்றும் சர்வதேச மாணவர்கள் இரண்டு முக்கிய முக்கிய புலம்பெயர்தல் திட்டங்கள் வாயிலாக விண்ணப்பிப்பதற்கு அத்தியாவசிய ஆவணமான கியூபெக் தேர்வு சான்றிதழ் வழங்குவதை இடைநிறுத்தியுள்ளது.

அதனால், வழக்கமான திறன்மிகுப் பணியாளர்கள் திட்டம் மற்றும் கியூபெக் அனுபவ திட்டத்துக்கான பட்டதாரி வழிமுறை ஆகியவற்றுக்கு புலம்பெயர்ந்தோர் விண்ணப்பிப்பது பாதிக்கப்படும்.

இந்த இடைநிறுத்தம் 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

கியூபெக் அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்க்கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.